செ.வெ.எண்.67

நாள்.28.03.2017

## பத்திரிக்கை செய்தி

---

தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக விரைவில் ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட உள்ளது. ஸ்மார்ட் கார்டு வழங்கும் பொது இடத்தில் ஏற்படும் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களுக்குரிய ஸ்மார்ட் கார்டு எப்போது எந்த இடத்தில் வைத்து வழங்கப்பட உள்ளது என்ற விபரம் அவர்களுக்குரிய கைப்பேசியில் குறுஞ்செய்தி மூலம் தகவல் வழங்கப்படும். குடும்ப அட்டை மொபைல் எண் பதிவு செய்த அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரு பின் நம்பர் வழங்கப்படும். அந்த பின் நம்பரை சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடையில் உள்ள "Point of Sales" கருவியில் பதிவு செய்த பின்னரே ஸ்மார்ட் கார்டு சம்பந்தப்பட்ட நபருக்கு வழங்கப்படும்.

எனவே பொது மக்கள் நாளது தேதிவரை தங்களது மொபைல் நம்பரை குடும்ப அட்டையுடன் இணைக்காதவர்கள் உடனடியாக இணைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் மொபைல் எண் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டியிருந்தால் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று மொபைல் எண் மாற்றம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

---

ந.க.எண். ண6/11250/16

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்
திருநெல்வேலி.
நாள்: .03.2017.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

28.3.17
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி

28.3.17